## விஜய்வசந்த் எம்.பி. பிரசாரம்...



கீழப்பாவூரில் திமுக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்கிறார் விஜய்வசந்த் எம்.பி. அவருடன் வேட்பாளர்கள் பி.எம்.எஸ்.ராஜன், ராஜசேகர், முத்துசெல்வி, அன்பரசி, அன்பழகு, கோமஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## சுரண்டையில் அதிமுக வாக்கு சேகரிப்பு



சுரண்டை நகராட்சியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரித்தார் மாவட்டச் செயலர் எஸ்.செல்வமோகன்தாஸ்பாண்டியன்.

**சுரண்டை, பிப்.14:** சுரண்டை நகராட்சியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர்களுக்கு ஆதரவாக முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினரும், தென்காசி தெற்கு மாவட்ட அதிமுக செயலருமான எஸ்.செல்வமோகன்தாஸ் பாண்டியன் வீதி, வீதியாக சென்று வாக்கு சேகரித்தார்.

அவருடன், அதிமுக வார்டு வேட்பாளர்கள் சக்திவேல், இந்திரா, வசந்தன், பாலமுருகன், ராஜேஷ் மற்றும் அதிமுக நிர்வாகிகள் உடன் சென்று வாக்கு சேகரித்தனர்.

## உள்ளாட்சித் தேர்தலில் திமுக வெற்றி பெறப்போவது உறுதி

கனிமொழி



தென்காசியில் பிரசாரம் மேற்கொண்ட கனிமொழி எம்பி.

**தென்காசி/சுரண்டை, பிப்.14:** நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் திமுக மற்றும் திமுக தலைமையிலான கூட்டணி கட்சியினர் வெற்றி பெறப்போவது உறுதி என கனிமொழி எம்பி தெரிவித்தார்.

குற்றாலம், மேலகரம், குடியிருப்பு, தென்காசியில் கொடிமரம், மவுண்ட் ரோடு, கூலக்கடை பஜார், பொன்னிப்பாறையடி தெரு, சுவாமிசன்னதிபஜார் ஆகிய பகுதிகளில் திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து திமுக மகளிரணிச் செயலர் கனிமொழி எம்பி திங்கள்கிழமை பிரசாரம் மேற்கொண்டார்.

அப் போது அவர் பேசியது: திமுக ஆட்சியில் தமிழகம் பாதுகாப்பாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. அதிமுகவும், பாஜகவும் ஒரே கருத்துடைய கட்சிகள்தான். எனவே மக்கள் விழிப்பாக வாக்களிக்க வேண்டும்.

திமுக தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகள் ஒவ்வொன்றாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. விரைவில் பெண்களுக்கான உரிமைத்தொகை ரூ.1000 விரைவில் வழங்கப்படும். அதிமுக ஆட்சியில் உள்ளாட்சித் தேர்தலே நடைபெறவில்லை. திமுக ஆட்சியில் தான் உள்ளாட்சித் தேர்தல் நடைபெறுகிறது. அதிமுகவிற்கு ஜனநாயகத்தின் மீதும், மக்களின் மீதும் நம்பிக்கை இல்லை. மக்களைப் பற்றிய கவலையுமில்லை, அக்கறையுமில்லை.

மக்களுக்கு எது தேவை என்பதை புரிந்து, அறிந்து செயல்படக்கூடிய ஆட்சி திமுக ஆட்சி. நல்லாட்சி, உள்ளாட்சியிலும் தொடர திமுகவிற்கு வாக்களிக்க வேண்டும். உள்ளாட்சிப் பிரதிநிதிகள்தான் அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு போய் சேர்க்கக்கூடிய பாலமாக செயல்படக்கூடியவர்கள்.

தென் தமிழகத்தில் மிகப்பெரிய அளவில் முதலீடுகள் ஈர்க்கப்படும் என தமிழக முதல்வர் அறிவித்துள்ளார். இதனால் ஏராளமானோருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றார் அவர்.

இதில், தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் பொ.சிவபத்மநாதன், நகரச் செயலர் சாதிர், ஒன்றியச் செயலர்கள் அழகுசுந்தரம், சீனித்துரை, துணை அமைப்பாளர் சிவநல்லூர்சாமித்துரை, கூட்டுறவு சங்க தலைவர் சுரேஷ், வழக்குரைஞர்கள் கே.பி.குமார்பாண்டியன், செந்தூர்பாண்டியன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதுபோல, சுரண்டை நகராட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவாக கனிமொழி பிரசாரம் செய்தார்.

இதில், சங்கரன்கோவில் சட்டப் பேரவை உறுப்பினர் ராஜா, நகரச் செயலர் ஜெயபாலன், தேர்தல் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் அன்பழகன், ஜெகராஜன், அருள், சாக்ரடீஸ், மகளிரணி அமைப்பாளர் முத்துசெல்வி, ஒன்றியக்குழு உறுப்பினர்கள் ஆலடி எழில்வாணன், சேக் முகம்மது உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## வள்ளியூரில் உதயநிதி ஸ்டாலின் பிரசாரம்



வள்ளியூரில் திமுக கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பேசுகிறார் உதயநிதி ஸ்டாலின் எம்எல்ஏ.

**வள்ளியூர், பிப். 14:** பணகுடி, வள்ளியூர், ஏர்வாடி, நான்குனேரி, திசையன்விளை ஆகிய பேரூராட்சிகளில் போட்டியிடும் திமுக கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து வள்ளியூர் காமராஜர் சிலை அருகே உதயநிதி ஸ்டாலின் எம்எல்ஏ பிரசாரம் செய்தார்.

அப்போது அவர் பேசியதாவது: தமிழ்நாட்டில் திராவிட கட்சிகள் இருக்கும் வரை பாஜக காலூன்ற முடியாது. பாஜக, அதிமுகவுக்கு சிம்மசொப்பனமாக திகழ்கிறார் நமது முதல்வர் ஸ்டாலின்.

வள்ளியூர் அரசு மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும். ரூ.271 கோடி மதிப்பில் குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப்படும், வீட்டுவசதி வாரிய குடியிருப்பின் கீழ் மூவாயிரம் வீடுகள் கட்டிகொடுக்கப்படும். ஆகவே, கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் நமது முதல்வர் நிறைவேற்றி தருவார். நீங்கள் அனைவரும் நமது கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்யுங்கள் என்றார்.

கூட்டத்தில், கிழக்கு மாவட்ட திமுக செயலர் இரா.ஆவுடையப்பன், திருநெல்வேலி எம்.பி. ஞானதிரவியம், வள்ளியூர் வடக்கு ஒன்றியச் செயலர் கிரகாம்பெல், மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ், அலெக்ஸ் அப்பாவு, ராதாபுரம் தெற்கு ஒன்றியச் செயலர் ஜோசப் பெல்சி, மாவட்ட மகளிரணி பொறுப்பாளர் மல்லிகா அருள், வள்ளியூர் நகரச் செயலர் வி.எஸ்.எஸ்.சேதுராமலிங்கம், வள்ளியூர் நம்பி, பெஸ்கி, சமூக ரெங்கபுரம் ஊராட்சித் தலைவர் அருள், நகர காங்கிரஸ் தலைவர் அல்போன்ஸ்ராஜா, சீராக் இசக்கியப்பன், விடுதலைச் சிறுத்தைகள் மாவட்டச் செயலர் சுந்தர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## ஆழ்வார்குறிச்சியில் தேர்தல் பார்வையாளர் ஆய்வு



ஆழ்வார்குறிச்சி ஸ்ரீபரமகல்யாணி மேல்நிலைப் பள்ளியில் வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைகளைப் பார்வையிடுகிறார் தேர்தல் பார்வையாளர் ஸ்ரீகாந்த்.

**அம்பாசமுத்திரம், பிப். 14:** ஆழ்வார்குறிச்சி பேரூராட்சியில் தேர்தல் ஆயத்தப் பணிகளை தேர்தல் பார்வையாளர் ஸ்ரீகாந்த் திங்கள்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பிப்.19 இல் நடைபெறவுள்ள நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை முன்னிட்டு ஆழ்வார்குறிச்சி ஸ்ரீபரமகல்யாணி மேல்நிலைப் பள்ளியில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறைகளை அவர் பார்வையிட்டார்.

மேலும், பதற்றமான வாக்குச் சாவடிகள் குறித்தும், அங்கு எடுக்கப்பட்டுள்ள அடிப்படை மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார். ஆய்வின்போது, தேர்தல் நடத்தும் அலுவலர் பூதப்பாண்டி, மண்டல அலுவலர் திருமலை ஆண்டவர், பறக்கும் படை அலுவலர் முருகப்பா, மாவட்டத் தேர்தல் பார்வையாளரின் தொடர்பு அலுவலர் கண்ணன், பள்ளித் தலைமை ஆசிரியர், பேரூராட்சி இளநிலை அலுவலர் அருணாசலம் உள்ளிட்டோர் இருந்தனர்.

## தெற்குவள்ளியூரில் வலிப்புநோய் விழிப்புணர்வு முகாம்



விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பேசினார் பள்ளித் தலைமையாசிரியை ஆரோக்கியமேரி.

**வள்ளியூர், பிப். 14:** வள்ளியூர் நேரு நர்ஸிங் கல்லூரி சார்பில் தெற்கு வள்ளியூர் ஆர்.சி.நிர்மலா நடுநிலைப் பள்ளியில் வலிப்புநோய் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

முகாம் தொடக்க நிகழ்ச்சிக்கு, பள்ளித் தலைமையாசிரியை ஆரோக்கியமேரி தலைமை வகித்தார். ஆசிரியை எவிலின் அமலா முன்னிலை வகித்தார். மாணவி ஆஷாமையூரி வரவேற்றார்.

நேரு நர்ஸிங் கல்லூரி மாணவிகள் வலிப்புநோய் குறித்த விழிப்புணர்வு பாடல் பாடினர். தொடர்ந்து குறுநாடகம் நடைபெற்றது. நாடகத்தில் வலிப்புநோய் வந்தவர்களை எப்படி கையாள வேண்டும் என்பதை வெளிப்படுத்தினர்.

பள்ளி மாணவர், மாணவிகள் மற்றும் ஆசிரியர்களின் சந்தேகங்களுக்கு கல்லூரி மாணவிகள் விளக்கமளித்தனர். முகாம் ஏற்பாடுகளை நேரு நர்ஸிங் கல்லூரி தலைவர் ஹெலன் லாரன்ஸ், தாளாளர் டி.டி.என்.லாரன்ஸ், முதல்வர் மார்க்ரெட் ரஞ்சிதம், பேராசிரியைகள் சுபிபாய், சத்தீஸ்வரி ஆகியோர் செய்திருந்தனர்.

## தென்காசியில் பொன்.ராதாகிருஷ்ணன் பிரசாரம்



பாஜக வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரசாரம் செய்த முன்னாள் மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன்.

**தென்காசி, பிப். 14:** தென்காசி நகர்மன்ற உறுப்பினர் பதவிக்கு பாஜக சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவாக முன்னாள் மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் பிரசாரம் மேற்கொண்டார்.

தென்காசி சக்தி நகர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு, மேல முத்தாரம்மன் கோயில், கீழப்புலியூர் ஆகிய பகுதிகளில் வீதி வீதியாக சென்று பிரசாரம் மேற்கொண்டார்.

பிரசாரத்தின்போது அவர் பேசியது: இத்தேர்தலில் தென்காசி நகராட்சியை பாஜக உறுதியாகக் கைப்பற்றும். தூய்மையான, அப்பழுக்கற்ற நிர்வாகம் நடைபெறும். எங்களுடைய வேட்பாளர்கள் வெற்றிபெற்றால் எந்த ஊழலும் நடைபெறாது. பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்றார் அவர்.

தென்காசி மாவட்டத் தலைவர் ராமராஜா, மாவட்ட பொதுச் செயலர்கள் ராஜேஷ் ராஜா, வழக்குரைஞர் முத்துலட்சுமி, மாவட்ட பொருளாளர் ராமநாதன், மாநில செயற்குழு உறுப்பினர் பாண்டித்துரை, மாவட்ட துணைத்தலைவர் பாலகுருநாதன், தென்காசி நகர பார்வையாளர் ஆனந்தி முருகன், நகர தலைவர் குத்தாலிங்கம், ஊடகப்பிரிவு மாவட்டத்தலைவர் செந்தூர்பாண்டியன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மேலும் 18 பேருக்கு கரோனா

**திருநெல்வேலி, பிப். 14:** திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்களில் மேலும் 18 பேருக்கு கரோனா நோய்த் தொற்று திங்கள்கிழமை உறுதி செய்யப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் புதிதாக 14 பேருக்கு நோய்த் தொற்று உறுதிசெய்யப்பட்டதால், பாதிப்பு எண்ணிக்கை 62,627 ஆகவும், 89 பேர் குணமடைந்ததால், வீடு திரும்பியோர் எண்ணிக்கை 61,636 ஆகவும் உயர்ந்துள்ளது. 445 பேர் உயிரிழந்துள்ளனர். 546 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தென்காசி மாவட்டத்தில் மேலும் 4 பேருக்கு தொற்று உறுதியானதால், பாதிப்பு எண்ணிக்கை 32,691 ஆகவும், 56 பேர் குணமடைந்ததால், அந்நோயிலிருந்து மீண்டோர் எண்ணிக்கை 32,092 ஆகவும் உயர்ந்துள்ளது. 490 பேர் உயிரிழந்துள்ளனர். 109 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## தென்காசி மாவட்டத்தில் 4 தினங்கள் மதுபானக் கடைகளை மூட உத்தரவு

**தென்காசி, பிப்.14:** தென்காசி மாவட்டத்தில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை முன்னிட்டு வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் தினங்களில் டாஸ்மாக் மதுபானக் கடைகளை மூட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக தென்காசி மாவட்ட ஆட்சியர் ச.கோபாலசுந்தரராஜ் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தென்காசி மாவட்டத்தில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு வியாழக்கிழமை (பிப். 17) காலை 10மணிமுதல் 19ஆம் தேதி நள்ளிரவு 12 மணிவரை வாக்குப் பதிவு நடைபெறும் பகுதிகளிலும், செவ்வாய்க்கிழமை (பிப். 22) வாக்கு எண்ணிக்கை தொடங்கும் நாளில் வாக்கு எண்ணும் மையங்கள் உள்ள பகுதிகளிலும், மேலும் வாக்குப் பதிவு நடைபெறும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 5 கி.மீ. சுற்றளவிலும், அரசு மதுபான சில்லரை விற்பனைக் கடைகள் மற்றும் அதனுடன் இணைந்து செயல்படும் மதுபானக்கூடங்கள் அனைத்தும் மூடப்படும் என்றார் அவர்.

## வீரவநல்லூரில் வியாபாரிகள் சங்கப் பேரவைக் கூட்டம்

**சேரன்மகாதேவி, பிப்.14:** வீரவநல்லூரில் வியாபாரிகள் சங்கத்தின் பேரவைக் கூட்டம் நடைபெற்றது. சங்கத் தலைவர் ச. ரத்தினராஜ் தலைமை வகித்தார். துணைத் தலைவர் எல். விநாயகவேல் முன்னிலை வகித்தார். செயலர் க. உலகநாதன் அறிக்கை வசித்தார். கூட்டத்தில், பொருளாளர் அ. அலியார், துணைச் செயலர் கிருஷ்ணன், சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.


### 15-ம் ஆண்டு நினைவஞ்சலி



D.O.B 15.10.1975

D.O.D 15.02.2007

P.மயிலேறும் பெருமாள் (முரளி) M.A.,B.L

S/o.R.M.பரமசிவம் (late) TNEB (Rtd)

என்றும் உங்கள் நினைவில் வாழும்

குடும்பத்தினர்கள், ஆழ்வார் திருநகரி.

### NAME CHANGE

I, **REGINAL PEERIS**, W/o. GREGORY PEERIS (Native district: Thoothukkudi), residing at 20/74, Roche Colony, 3rd Street, Thoothukkudi 628001, Tamilnadu, shall henceforth be known as **REGINAL FERNANDO.**

**REGINAL PEERIS**

Thoothukkudi, 8th February 2022

### CHANGE OF NAME

I, **M.HASAENI**, Wife of Thiru: SHARABUDEEN, born on: 12-12-1973 (Native District: Kanyakumari), residing at No: 18-147/2, Eniyanagar, Enayam-Post, Kanyakumari-Dist, Pin- 629 193, Tamilnadu. Shall henceforth be known as **ASAYINI.**

**M. HASAENI.**

Enayam, 14th, February, 2022.

படிவ எண்: **INC-26**

[நிறுவன (இணைப்பு) விதிகள் **2014**, விதி **30**-க்கு இணங்க]

மண்டல இயக்குநர் முன்னிலையில், தெற்கு மண்டலம்

பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம்

நிறுவனச் சட்டம் 2013-இன் பிரிவு 13(4) மற்றும் நிறுவன (இணைப்பு) விதிகள் 2014-இன் விதி 30(5) (a) தொடர்பானது

மேலும்

HG இன்டஸ்ட்டிரீஸ் லிமிட்டெட் (முந்தைய பெயர் ஹிமாலயா கிரானைட்ஸ் லிமிட்டெட்) (பெருநிறுவன அடையாள எண் L20100TN1987PLC015161) என்கிற, நிறுவனச் சட்டம் 1956-இன் கீழ் நிறுவப்பட்டதும் தற்பொழுது பாஞ்சாலம் கிராமம், மேல்பேட்டை அஞ்சல், திண்டிவனம், தமிழ்நாடு - 604307 எனும் முகவரியில் பதிவு அலுவலகத்தைக் கொண்டுள்ளதுமான நிறுவனம் தொடர்பானது ...மனுதாரர்

பதிவு அலுவலக இடமாற்ற ஆட்சேபணை அறிதல் அறிவிப்பு

பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி நிறுவனம் ஜனவரி 21, 2022 அன்று நடைபெற்ற அஞ்சல் வழி வாக்கெடுப்பில் நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானத்தின்படி நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தைத் "தமிழ்நாடு மாநில"த்திலிருந்து "தேசியத் தலைநகரான தில்லி ஒன்றிய"த்துக்கு மாற்றப் பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகத் தெற்கு மண்டலத்தின் மண்டல இயக்குநரிடம் ஒப்புதல் கோரி நிறுவனச் சட்டம் 2013, பிரிவு 13(4)-இன் கீழ் விண்ணப்பிக்கத் திட்டமிட்டுள்ளது.

நிறுவனத்தின் இந்த மாற்றம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்க விருப்பம் உள்ளவர்கள் முதலீட்டாளர் புகார்ப் படிவத்தை **MCA-21** (**www.mca.gov.in**) இணைய முகப்பில் பதிவு செய்வதன் வாயிலாக அதைத் தெரிவிக்கலாம் அல்லது எந்த அடிப்படையில் ஆட்சேபிக்கிறார்கள் என்பதை விளக்கும் உறுதிமொழிக் கடிதத்துடன் கூடிய ஆட்சேபணைகள் மற்றும் ஆட்சேபணைக்கான காரணங்கள் ஆகியவற்றைப் பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகத் தெற்கு மண்டலத்தின் மண்டல இயக்குநருக்கு அன்னாரின் 5ஆவது தளம், சாஸ்திரி பவன், 26, ஹாடோஸ் சாலை, சென்னை – 600006, தமிழ்நாடு எனும் முகவரிக்கு இந்த அறிவிப்பு வெளியாகும் நாளிலிருந்து 14 நாட்களுக்குள் நேரிலோ பதிவு அஞ்சலிலோ அனுப்பி வைக்கலாம். அதன் நகலை விண்ணப்பதாரரின் நிறுவனத்துடைய மேற்குறிப்பிட்ட பதிவு அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**HG** இன்டஸ்ட்டிரீஸ் லிமிட்டெட் சார்பில்

(முந்தைய பெயர் ஹிமாலயா கிரானைட்ஸ் லிமிட்டெட்)

ஒம்/-

ஹரிஓம் பாண்டே

(நிறுவனச் செயலர்)

நாள்: **14.02.2022**

இடம்: புது தில்லி

### படிவம் - B, பொது அறிவிப்பு

இந்திய திவால் மற்றும் திவால் நிலை வாரியம், விதிமுறை 12 (Liquidation Process) விதிமுறைகள், 2016)

ஸ்ரீ பத்ரா பார்க்ஸ் மற்றும் ரெசார்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் பங்குதாரர்களின் கவனத்திற்கு

| | | |
|---|---|---|
| 1. | கார்ப்பரேட் கடனாளியின் பெயர் | SREE BHADRA PARKS AND RESORTS LIMITED |
| 2. | கார்ப்பரேட் கடனாளியை இணைக்கும் தேதி | 21.10.1998 |
| 3. | கார்ப்பரேட் கடனாளியின்கீழ் உள்ள அதிகாரம் இணைக்கப்பட்டது / பதிவுசெய்யப்பட்டது | ROC - எர்ணாகுளம், கேரளா |
| 4. | கார்ப்பரேட் கடனாளியின் நிறுவன அடையாள எண் / வரையறுக்கப்பட்ட பொறுப்பு அடையாள எண் | U55102KL1998PLC012533 |
| 5. | கார்ப்பரேட் கடனாளியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் / தலைமை அலுவலகம்(தேதும்) இருந்தால் | பதிவு அலுவலகம் : XXVII/480 [illegible] 680020 தலைமை அலுவலகம் : ஸ்ரீ பத்ரா பார்க்ஸ் மற்றும் ரெசார்ட்ஸ் லிமிடெட் [illegible] கன்னியாகுமரி - 629702. |
| 6. | திவால்நிலை தீர்க்கும் செயல்முறை முடிவடையும் தேதி | 09-02-2022 |
| 7. | கார்ப்பரேட் கடனாளியின் Liquidator தொடக்க தேதி | 10-02-2022 |
| 8. | திவால்நிலை நிபுணரின் பெயர் Liquidator ஆக செயல்படும் பதிவு எண் | Mr.K.பரமேஸ்வரன் நாயர் (Reg. No. IBBI/IPA-001/IP-P01773/2019-20/12702) |
| 9. | வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட Liquidator முகவரி மற்றும் மின்னஞ்சல் | Mr.K.பரமேஸ்வரன் நாயர், 37/1736E, [illegible], K. முரளி ரோடு, [illegible], கொச்சி- 682020. Email- cakpnair@gmail.com, Mob: +91 9567875348 |
| 10. | Liquidator உடன் கடித பரிமாற்றத்திற்கான முகவரி மற்றும் மின்னஞ்சல் | Mr.K.பரமேஸ்வரன் நாயர், 37/1736E, [illegible], K. முரளி ரோடு, [illegible], கொச்சி- 682020. Email- cakpnair@gmail.com, Mob: +91 9567875348 |
| 11. | கோரிக்கைகளை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 12.03.2022 |

தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், கொச்சி பெஞ்ச், 10.02.2022 அன்று M/s. ஸ்ரீ பத்ரா பார்க்ஸ் மற்றும் ரெசார்ட்ஸ் லிமிடெட் Liquidator தொடங்க உத்தரவிட்டுள்ளது என்று இதன்மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

M/s. ஸ்ரீ பத்ரா பார்க்ஸ் மற்றும் ரெசார்ட்ஸ் லிமிடெட்டின் பங்குதாரர்கள் தங்கள் உரிமை கோரல்களை 12.03.20 அன்று அல்லது அதற்கு முன் இனம் எண்.10க்கு எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள Liquidator-க்கு ஆதாரத்துடன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தொடர்புடைய படிவங்கள் இணைய இணைப்பில் https://www.ibbi.gov.in/home/downloads கிடைக்கின்றன.

நிதிக் கடன் வழங்குபவர்கள் தங்கள் உரிமை கோரல்களை மின்னணு முறையில் மட்டுமே ஆதாரத்துடன் சமர்பிக்க வேண்டும். மற்ற அனைத்து கடன் வழங்குநர்களும், நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அல்லது மின்னணு முறை மூலமாக ஆதாரத்துடன் கோரிக்கைகளை சமர்ப்பிக்கலாம். உரிமைகோரல்களின் தவறான அல்லது தவறான ஆதாரத்தை சமர்ப்பித்தால் அபராதம் விதிக்கப்படும்.

Sd/-

தேதி: 11-02-2022

இடம்: கொச்சி

**Mr.K.பரமேஸ்வரன் நாயர்**

பதிவு எண்.IBBI/IPA-001/IP-P01773/2019-20/12702

Liquidator of M/s. ஸ்ரீ பத்ரா பார்க்ஸ் மற்றும் ரெசார்ட்ஸ் லிமிடெட்

### தமிழ்நாடு கிராம வங்கி

இடைக்கல் கிளை

பிற்சேர்க்கை – 13 இணைப்பு IV (விதி 8(1))

சுவாதீன அறிவிப்பு (அசையாச் சொத்துக்கானது)

கீழே கையொப்பமிட்டுள்ளவர், **தமிழ்நாடு கிராம வங்கியின்** அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் படி, மேற்படி பிரிவு 13(12)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 8&9-ன் கீழும், தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கடன்தாரர்கள் **திரு.மணிகண்டன் S/o. ராஜாமணி**, 6/838-1, வானொலி நிலைய சாலை, அருணகிரிபுரம் அவர்கள் எமது கிளையில் வைத்துள்ள கடன் கணக்கு தொடர்பாக அவர்களுக்கு **01.10.2021** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பினை (DEMAND NOTICE) அனுப்பி, அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் அதில் காணும் பாக்கித் தொகை **ரூ.2,19,377/-(ரூபாய் இரண்டு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து முந்நூற்று எழுபத்தேழு மட்டும்)**-+ வட்டி சேர்த்து செலுத்துமாறு கோரியிருந்தார்.

ஆனால், கடன்தாரர் மேற்படி பாக்கித் தொகையை முழுவதும் செலுத்தி கணக்கை முடிக்கத் தவறிவிட்டதால், கடன்தாரர், மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய விதிகள் 8&9-ன் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை **10.02.2022 அன்று வங்கியின் அதிகாரபூர்வ அலுவலர் தமது சுவாதீனத்தில்** (POSSESSION) எடுத்துக் கொண்டுள்ளார்.

எனவே, கடன்தாரர், மற்றும் முக்கியமாக பொதுமக்களுக்கு இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமாகியுள்ள மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ, நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது **தமிழ்நாடு கிராம வங்கிக்குச்** செலுத்த வேண்டிய **07.02.2022** அன்றுள்ளபடியான கடன் பாக்கி **ரூ. 2,16,601/-(ரூபாய் இரண்டு இலட்சத்து பதினாறாயிரத்து அறுநூற்று ஒன்று மட்டும்)** மற்றும் வட்டி மற்றும் இதர கட்டணங்கள் சேர்த்துச் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும். இது கடன்தாரரின் மொத்த கடன் பொறுப்பாகும்

சொத்து அட்டவணை விவரம்

சொத்தின் இருப்பிடம்:S.F.No./ T.S.No.:கதவு எண். 382(1), வார்டு எண். 6, சர்வே எண். 396/2z, தெற்கு- வடக்கு வானொலி நிலையத் தெரு (மேற்கு வரிசை), இடைக்கால்-சேர்ந்தமரம் சாலை (தெற்குப் பகுதி), கிராமம் / தொகுதி : அருணகிரிபுரம், நைனாரகரம் கிராமப் பஞ்சாயத்து, தாலுகா/ வார்டு: கடையநல்லூர் தாலுக்கா, மாவட்டம் / நகராட்சி : திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு.

**சொத்து எல்லைகள்:**

**வடக்கு:** T.காசி இல்லம்

**தெற்கு:** நாராயணன், ராமர் & தரப்பு வீடு

**கிழக்கு:** தெற்கு - வடக்கு தெரு

**மேற்கு:** வேம்படி & தரப்பு நிலம்

மனையின் மொத்த பரப்பளவு:60.00 ச.மீ.

நாள் : 10.02.2022

இடம் : இடைக்கல்

அதிகாரப்பூர்வ அலுவலர்

தமிழ்நாடு கிராம வங்கி

### ICAR-MANDAPAM REGIONAL CENTRE OF CENTRAL MARINE FISHERIES RESEARCH INSTITUTE

Marine Fisheries P.O. Mandapam Camp,

Ramanathapuram District Tamil Nadu - 623520.

Phone: 914573-241443 & 241973 Fax: 04573-241502

CMFRI

F.No.24-11/2021-ST

Dated: 14-02-2022

**NOTICE INVITING E-TENDER**

E-tenders are invited from reputed service Providers/Dealers/Service Centres for Comprehensive Annual Maintenance Contract for RO Plant (2 Nos.) at the Mandapam Regional Centre of CMFRI, Mandapam Camp for a period of one year. You can apply through the CPP Portal **www.eprocure.gov.in.** The Service and e-tender Id are given below for reference.

**CPPP Tender ID: 2022_ DARE_673529_1** for Comprehensive Annual Maintenance Contract for RO Plant (2 Nos.)

Tender documents may be downloaded from CMFRI website **www.cmfri.org.in /tender** (for reference).

Sd/- **Head-in-Charge**